செ.வெ.எண்: நாள்:03.06.2021

**விருதுநகர் மாவட்டம்**
**கே.வி.எஸ் நூற்றாண்டு பள்ளி மைதானத்தில்**
**200 ஆக்ஸிசன் படுக்கை வசதியுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படவுள்ளது-**
**மாவட்ட ஆட்சியர் தகவல்**
**---**

விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அருகே, கே.வி.எஸ் நூற்றாண்டு பள்ளி மைதானத்தில், புதிததாக அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்க உள்ள நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு இன்று (03.06.2021) ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்றை கட்டுக்குள் கொண்டு வரவும், உயிரிழப்புகளை தடுப்பதற்கும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, கே.வி.எஸ். நூற்றாண்டு பள்ளி மைதானத்தில் 200 ஆக்ஸிசன் படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது பணிகள் நிறைவடைந்துள்ளது. இந்த கொரோனா சிகிச்சை மையம் நாளை(04.06.2021) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த கொரேனா சிகிச்சை மையத்திற்கு தேவையான குடிநீர் வசதி, மின்சார வசதி, மருத்துவ பணியாளர்களின் அறைகள், அவர்களுக்கு தனியான அமைக்கப்ட்டுள்ள கழிவறை வசதிகள், மற்றும் இந்த சிகிச்சை மையத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள ஆக்ஸிசன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள், கழிவறை, குளியலறை வசதிகள், உள்ளிட்ட அடிப்படை வசதிகள் உள்ளிட்டவைகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.மங்களராமசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார், அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சங்குமணி, உள்பட மருத்துவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்திமக்கள் தொடர்பு அலுவலகம்,விருதுநகர்.**